திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆவுடையார்புரம் பொது மக்கள் அந்த ஆற்றிலுள்ள நீரை அருந்துவதாக அமைச்சரவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. மேலும் 4 மாதங்களுக்கு முன்பாக அந்தத் தண்ணீரை அருந்திய குழந்தைகளுக்கு எல்லாம் இளம் பிள்ளை வாதம் ஏற்பட்டதாகவும், அவர்கள் விருதுநகர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தத் தண்ணீரை அருந்துவதற்குத் தடை விதித்ததாகவும அந்தப் பகுதி பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஆனால் மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்தத் தண்ணீரை அருந்துவதற்கு எந்தத் தடையும் இல்லை, தண்ணீர் சுத்தமாக இருக்கிறது என்று அறிக்கை கொடுத்திருக்கிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த அறிக்கை சரியா அல்லது இப்போது அமைச்சரவர்கள் கொடுத்த அறிக்கை சரியா என்பது தெரியவில்லை. ஆதலால் அமைச்சரவர்கள் மீண்டும் இதில் கவனம் செலுத்தி, இந்த ஆற்றுத் தண்ணீரை அருந்தத் தடை விதிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை கொடுத்ததாகத் தகவல் இல்லை. அது கிடைக்குமானால், அது குறித்து அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

(உ) பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலைக் கழிவுநீரால் பாதிப்பு

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலையின் கழிவு நீராலும் புகையாலும் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1987 ஏப்ரல் 28] [திரு. ப. உ. சண்முகம்]

அறிக்கை.

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தாலுக்கா, இறையூர் கிராமததில் பெரம்பலூர் சர்க்கரை ஆலை லிமிடெட் (நேரு சர்க்கரை ஆலை) இருககிறது. இத்தொழிற்சாலை மாதத்திற்கு 4,000 மெட்ரிக் டன் சக்கரையைத் தயாரிக்கிறது. கரும்புகள் சிறு சிறு துண்டுகளாக நறுக்கப்பட்டு ரோலர் மிஷன் மூலம் சாறு பிரித்து எடுக்கப்படுகிறது. பிறகு இத்துடன் தண்ணீர் கலந்து அதிக அளவு சாறு எடுக்கப்படுகிறது. இந்த சாறு ஒரு ஸ்டெயினர் மூலம் செலுத்தப்படுகிறது. பிறகு இந்தச் சாற்றுடன் சுண்ணாம்பு கலந்து சூடேற்றப்படுகிறது.

சூடேற்றப்பட்ட சாறு பிறகு தெளிய வைக்கப்படுகின்றது. பிறகு சல்பர்-டை-ஆக்ஸைட் சாற்றில் செலுத்தப்படுகிறது. தெளிவாக்கப்பட்ட சாறு மீண்டும் சூடேற்றப்படுகின்றது. இதன் மூலம் சாறு அடர்த்தமான அல்லது கனமான திரவமாக்கப்பட்டு பின்பு சிறு கட்டிகளாக மாற்றப்படுகின்றது. மூலச் சாற்றி லிருந்து சர்க்கரைக் கட்டிகள் மீது தண்ணீர் தெளிக்கப்பட்டு பிரிக்கப்படுகிறது. மொலாஸஸ் வடிக்கப்பட்டு வெளியேற்றப் படுகிறது. தெளிப்பது, கழுவுதல், ஒழுகுதல், குளிரூட்டப்படும் நீருடன் கலந்த எண்ணெய் மற்றும் சாறு, கழுவுவதால் உண்டாகும் கழிவு முதலியன சர்க்கரைத் தொழிற்சாலைக் கழிவுநீராக நாளொன்றுக்கு 1,000 கிலோ லிட்டராக வெளியேற்றப் படுகிறது. சர்க்கரை ஆலையின் கழிவுநீர் அமிலத்தன்மை உடையதாகவும் மிதக்கும் திடப்பொருட்கள், உயிர் இரசாயன உயிரகத் தேவை, இரசாயன உயிரகத் தேவை எண்ணெய்ப் பொருட்கள் முதலியவற்றையும் கொண்டுள்ளது.

1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்படி வடிகால் கழிவுநீர்/தொழிற் சாலைக் கழிவுநீரினை வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அனுமதி கோரி இத்தொழிற்சாலை விண்ணப்பித்தது. வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கேற்ப தொழிற் சாலைக் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப் பட்டது. அனுமதி வழங்கிய பிறகு, தொழிற்சாலையானது சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்கும் பொருட்டு தொழிற்நுட்ப ஆலோசகரை அணுகியது.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 28

தொழிற்சாலையானது 2—4—1987-ல் ஆய்வு செய்யப்பட்டபோது ஆலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரானது மண்குட்டையில் தேக்கி வைக்கப்படுவது தெரிய வந்தது. அதனன்று வெளியேறும் உபரி நீர் ஒரு பாசன வாய்க்கால் மூலம் சென்று தொழிற்சாலையிலிருந்து சுமார் 500 மீட்டர் தூரத்திலுள்ள பொதுப் பணித்துறை சின்னார் நீர்த்தேக்க பாசன வாய்க்காலைச் சென்றடைகின்றது. பொதுபணித்துறை வாய்க்காலில் விடப்படும் தொழிற்சாலைக் கழிவுநீர் நல்லூர் என்னும் இடத்தில் தடுக்கப்பட்டு கழிவுநீரை, முறைவைத்து, விவசாயத்திற்கு விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். கழிவுநீரினை பொதுப்பணித்துறை வாய்க்காலில் திருப்பிவிட மக்கள் அமைத்திருக்கும் கரையானது உடையும்போது தொழிற்சாலைக் கழிவுநீரானது சின்னாறை சென்றடைவதாகச் சொல்லப்படுகிறது. சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீரானது ஆற்றை சென்றடையும்போது நிலநீர்/நிலத்தடிநீர் மாசுபட வாய்ப்புள்ளது.

காற்று மாசடைவதைப் பொறுத்தவரை, கொதிகலன் பிரிவு, சாறு சல்பைட்டேசன் பிரிவு மற்றும் திரவ சல்பைட் பிரிவுகளிலிருந்து முக்கியமாக வாயுக் கழிவுகள் வெளிவருகின்றன. வெப்ப வாயுக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக கொதிகலனிலிருந்து 33.33 மீட்டர் உயரத்தில் புகை போக்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை ஒவ்வொன்றும் 15.2 மீட்டர் உயரமுள்ள இரண்டு புகை போக்கிகளை முறையே சாறு/திரவ சல்பேட் பிரிவுகளில் நிறுவியுள்ளது.

1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளின்படி வாயுக்கழிவுகளைக் கட்டுப்படுத்தி வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையின்படி தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டது. தொழிற்சாலை எடுத்துவரும் நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர்வர்களே, நேரு சர்க்கரை ஆலையில் சல்பர்-டை-ஆக்சைடு போன்ற இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

1987 ஏப்ரல் 28] [டாக்டர் க. நல்லமுத்து]

அந்தக் கழிவு நீரால் நிலத்தடி நீரும், வாயு மண்டலமும் பாதிக்கப்படுவதால், அதனுடைய விஷம் கலக்கப் படுவதால், மனிதனுடைய இருதயம், இரத்தம், ஈரல், சிறுநீரகம், மூளை, டைஜஸ்ட்டிவ் சிஸ்டம் போன்றவைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, அந்த மனிதனுடைய உடல் நலம் பாதிக்கப்பட்டு, உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலை இருப்பதுடன், அங்கே இருக்கும் விலங்குகள், தாவர இனங்கள் பாதிக்கப்படுகின்றன. இதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர வர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அவ்வளவு பயங்கரமாக எதுவும் இல்லை. ஆனால் பாதிப்பு இருக்கிறது என்பதை நான் ஓரளவுக்கு ஒப்புக்கொள்கிறேன். மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இதைக் கவனித்துக்கொண்டு வருகிறது. மேற்கொண்டு நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலமாக அரசு எடுக்கும்.

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் 1974-ல் இந்த ஆலையில் கழிவு நீர் புகை வாயு மண்டலத்தோடு சேருவதைத் தடுக்க தடுப்பு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அறிகிறேன். இது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர வர்களே, தகுந்த நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும்.

(பகற்பகல் 11-20)

(ஊ) அம்பாசமுத்திரம் வட்டம் அரசன்குளத்தில் பள்ளியில்லாதது.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அரசன்குளம் கிராமத்தில் பள்ளிக்கூடம் ஒன்றும் இல்லாமையால் அங்குள்ள குழந்தைகள் சுமார் 2 கி.மீ. தூரம் உள்ள அரியநாயகிபுரத்திற்குச் சென்று படித்து வருவதால் அங்குள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS